# இந்துசாதனம்.

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரக் கிரயம்.**

| | |
|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு | ரூ. 5-60 |
| வெளியூர், இந்தியா: ,, | ரூ. 9-40 |
| தொலைவாய்ப்பகுதி: ,, | ரூ. 9-40 |
| தனிப்பிரதி: | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| முதன் முறைக்கு:— | ஒருகலம் | ரூ. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரூ. 5 00 |
| ,, | கால்கலம் | ரூ. 3-15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு மேல் விகிதங்களிற் பாதி. விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௩௫. } யாழ்ப்பாணம்:—ருதிரோத்காரி௵ தைமீ ௩௧௨ (1924 ஜனவரி 31) வியாழக்கிழமை. { இலக்கம்—௫௮.


உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிதா வுணர்ச்சி தேங்கச்
 சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
 பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
 பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
 மதம்பூத்தவிநாயகன்ருள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

---

யாழ்ப்பாணம்
## சைவபரிபாலனசபையாராற் பிரசுரஞ் செய்யப்பெற்ற
## புத்தக விளம்பரம்.

| | ரூ. ச. |
|---|---|
| முதற்பாலபாடம்(சித்திரசகிதமானது) | ௧0 |
| இரண்டாம் பாலபாடம் ,, | ௧௫ |
| மூன்றும் பாலபாடம் ,, | ௨0 |
| நான்காம் பாலபாடம் … … | ௩0 |
| ஐந்தாம் பாலபாடம் … …. …. | ௪0 |
| ஆறும் பாலபாடம் …. … … | ௫0 |
| கலாமஞ்சரி விளக்கத்துடன் | ௭௫ |
| கிருட்டிணன் றூது, உரையுடன் | ௮௫ |
| நமச்சிவாயமாலை, உரையுடன்… | ௩ |
| ஆத்திசூடி … … … | ௩ |
| வெற்றிவேற்கையுரை … … | ௩ |
| வாக்குண்டாமுரை … … … | ௩ |
| கல்வழியுரை … … | ௩ |
| நன்னெறியுரை … …. … … | ௩ |
| இனியவை நாற்பதுரை (ஆங்கில மொழிபெயர்ப்புடன்)… … … | ௧௨ |
| இலக்கண வினுவிடை… … … | ௧0 |
| நிகண்டு ௧௧-வதும் ௧௨-வதும் … | ௨௫ |
| திருவாதவூரடிகள்புராண மூலம் … | ௨௫ |
| திருச்செந்தூர்ப்புராணவுரை | |
| கிளேஸ்காகிதம் … … … | ௧-௨௫ |
| றவ்காகிதம்… … … … | ௧-00 |
| கந்தரலங்காரம் கந்தரநுபூதியுடன் | ௧0 |
| கந்தசஷ்டி கவசம் … … … | ௩ |
| சுப்பிரமணியசுவாமி விருத்தம் … | ௩ |
| ஆறுமுகசுவாமி விருத்தம்… … | ௩ |
| பிள்ளையார்கதை … … … … | ௧௨ |
| கதிரைமலைப் பேரின்பக்காதல் … | ௧௨ |
| பிரபஞ்சப் பெருவழக்கு … … | ௧0 |
| இந்துசமயி தாவரஜீவியாயிருத்த லேன்? … … … … … | ௧0 |
| சாவித்திரி சரித்திரம்(புதியபதிப்பு) | ௬ |
| குமணசரித்திரம் ,, | ௬ |
| பஞ்சரத்தினத் திருப்புகழ் … …. | ௩ |
| சோமவாரவிரதமான்மியம்… …. | ௧0 |
| கந்தவிரதமான்மியம் …. …. …. | ௧0 |
| சிவபூசைத்திரட்டு … (புதியபதிப்பு) | ௧௫ |
| மறைசையந்தாதி … … … | ௨0 |

ஒரேமுறையில் 25/ ரூபாவுக்குப் புத்தகம் எடுப்பவர்களுக்குப் 10 புத்தகத்துக்கு 2 புத்தகம் கழிவுகொடுக்கப்படும்.

முற்பணமனுப்புவோர் முத்திரையனுப்பாது போஸ்றல் ஆடரேனும் மனி ஆடரேனும் முத்திரைச்செலவுஞ் சேர்த்து வண்ணார்பண்ணைத் தபாலாபீசிற் பெறக்கூடியதாக அனுப்புதல்வேண்டும். இருபத்தைந்து ரூபாவுக்குக் குறைந்த ஆடர்கள் எம்மால் வீ. பீ. யில் அனுப்பப்படமாட்டா.

சபையார் அச்சிட்ட புத்தகங்களன்றி ஏனைய புத்தகங்கள் இங்கு விலைக்குக் கிடையா.

சபையார் அச்சிட்ட புஸ்தகங்கள் வண்ணார்பண்ணை, S. S. சண்முகம், பிறிற்ருனியா ஸ்ரோர், சரஸ்வதி புத்தக சாலை முதலிய இடங்களிலும், பருத்தித்துறை S. P. சுல்த்தான் சிக்கந்தரிடத்திலும், வல்லுவெட்டித்துறை ந. வ. அரியகுட்டிப் பிள்ளை, வீ. எம். கந்தசாமி இவர்களிடமும் தக்க கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

மானேசர்,
"இந்துசாதன" ஆபீஸ்,
வண்ணார்பண்ணை.

---


[ESTABLISHED 1909].

**MESSRS. A. S. M. A. KHADER BROTHERS**
**Kairul Muslimeen Medical Hall**
**PORTONOVO** (*SouthArcotDistrict*).

குழிக்கப்போய் சேற்றைப் பூசிக்கோள்வதுபோல்
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா **1000** இனுமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவத்தையு மடைவிக்கச் செய்யவில்லையென்ருவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்ருவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாப்ஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் சந்தோஷிக்கச் செய்வது

உத்திரவாதமுள்ளது.

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லற இன்பவாழ்க்கையை யடைந்து புத்திர பவுத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அ[illegible]ர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய வைகளை அடையக்கூடிய அமான ஒப்பற்றஓர்புருஷசஞ்[illegible] கின்றது. மற்றவிபரங்களை நமதுகேட்லாக்கில்காணலாம்.

லேகியத்தின் முக்கிய குணமாவது.

வாத பித்த சிலேத்ம பிருதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, ஏழுவகை தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்சுருக்கு, நீரெரிச்சல், நீர்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களை சுகப்படுத்தி, புதியமேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய வைகளைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது. இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனைக்குடன் அறியவேண்டியதென்றே ஜனனுகூல நன்மைக்காகவே இதனை மிகவுங் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றோம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.

வி. பி. தபால் செலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினல் V. P. தபால்செலவு [illegible]லும். பினங்கு, சிங்கப்பூர், கின்னான், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசகர்கள் மருந்தின் கிரையமும், தபால்சார்ஜ ரூபா 2ம் [illegible] அவர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது நெய்குருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்ருவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டதால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்ருவது கடவுளுக்குப் பொதுவாய் ரூபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயத்தையும் ரூபா 1000 இனுமாயும் கொடுக்கப்படும். அப்படி ரூபித்தும் இனுமுடையப்பணத்தை கொடுபடாவிட்டால் கோட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதன்றியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குணமுண்டென்ருவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தை செய்து காட்டினலாவது முன் கண்ட இனும் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

Telegraphic Address
Khader Brothers
Porto-Novo,
(Y. 19,)

என் மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, தேன்னுற்காடு ஜில்லா.

---

## நாணயமான சரக்குகள்! சகாய விலை.

காசி பட்டுச் சேலைகள், ரவிக்கைகள், துப்பட்டாக்கள், வெண்பட்டு வேஷ்டிகள், உல்லன் பேர்வைகள் முதலியன மிகவும் சகாயமான விலைக்கு அனுப்பப்படும்.

தமயந்தி மின்னல் கோடிச் சேலைகள். எல்லா லேட் கலர்களிலும் கிடைக்கும்.

16 முழம் நீளம் 2½ முழம் அகலம் உடலில்பட்டுப்பூவேலைகளுடன் ஜரிகைக் கட்டங்கள் வேலை செய்தது. சேலை 1க்கு ரூ. 45 முதல் ரூ. 100 வரை.

கத்தரிப்பூ சேலைகள்.

16 முழம் நீளம் 2½ முழம் அகலமுடையது. விளிம்பில் 1½, 2 இஞ்ச ஜரிகையினுல் கொடி செடி வேலையுடன் முந்தியில் 5 அல்லது 6 இஞ்ச உயர்ந்த ஜரிகையினுல் பூ வேலைகள் செய்யப்பட்டது. சேலை 1-க்கு ரூ. 80 முதல் ரூ 150 வரை.

"கேட்லாக்" இனும். உடனே எழுதுங்கள்.

பட்டு பீதாம்பர கம்பெனி,
காசி.

**Silk Pitamber Coy.,**
Pitamber Buildings,
BENARES CITY.

(Y. 27)

காசிநாடா சேலை.

16 முழ நீளம்; 2½ முழ அகலம்.

இந்தச் சேலைகள் வெள்ளை மல்லிகைப்பு, கறுப்புச்சேர்ந்த சாக்லெட் நிறம்போல், பூக்கள் புட்டாக்கள் போட்டு, சுற்றிலும் எழுத்துவேலையில் கரைகட்டியிருக்கும். இது புதுமாதிரி. இதுவரைக்கும் தயாரானதில்லை. விலை ரூபா 5—8—0.

வெள்ளிக்கெண்டைச்சால்வை.

5½ முழ நீளம்; 2½ முழ அகலம்.

இது மிகவும் நேர்த்தியாகவும் பளபளப்பாகவும் கைஸ் நூலினுல் நெய்யப்பட்டதுமான சால்வை.

ஒரு இஞ்ச வெள்ளிக் கெண்டைப் பட்டையுள்ளது. விலை ரூபா 7—0—0.

விலாசம்:— கனக அண்டு கம்பெனி.
(Y. 18.) பார்க்டவுன் போஸ்ட், மதராஸ்.

---

அநேக பரிசு நற்சாக்ஷிகளும் பெற்ற மருந்துகள்.

## இழந்துபோன பலத்தை

ஒரு குளிகை சாப்பிட்ட 6 மணி நேரத்தில் கொடுக்கும்!!

### ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.

புஷ்டிக்கு கைகண்ட மருந்து.

இதை இன்றே பரீட்சித்துப்பார்க்கவும்.

ஆச்சரியமான குணம்! மிக இன்பமான சுகம்!

புஷ்டியை உண்டாக்குவதில் இது எதற்கும் நிகரற்றது! எந்த மருந்தும் இதற்கு இணையல்ல! ஒரே குளிகையில் பரீக்ஷை பார்க்கலாம்! தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றும்! வீரியத்தைக் கெட்டிப்படுத்தும், இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத்தருவதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை.

150-மாத்திரை ரூ. 10. 50-மாத்திரை ரூ. 4 0-0
20-மாத்திரை ரூ. 2. வி. பி. சார்ஜ்வேறு.

### பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம் உடனே தீற்கும். புட்டி ரூபா 2.

### ரசமணி.

சகல வசியம், தனலாபம், அருள், கீர்த்தி, தொழில்பிவிருத்தி, நினைத்தகாரிய சித்தி மென் மேலும் பெருகும், தொத்து நோய், அவமிருத்து தோஷம், மோகவியாதிகள் அனுகாது. உபயோகிக்கும்முறை மணியுடன் வரும், மணி 1-க்குரூபா 2. 6 மணி ரூபா 10.

பினங்கு, சிங்கப்பூர், நேட்டால், முதலிய தேசவாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும்.

☞ T. R. கருப்பண பிள்ளை,
வைத்தியசாலை,
(Q. 40) பழனி. S. I.

---

பல தலைமுறையாய் பிரபலபிரசித்தியடைந்த
வீ. ஸாமி அய்யங்காருடைய
### அறைக்கிரைவிரைத்தைலம்.

V. SAMMY AYENGAR'S Arakeerai Verai Thailam TRADE MARK

இதன் குணம்:

பித்த மேகசீரானது சிரசுக்கேறி அதனுற் கண்மறைப்பு, கண்ணெரிச்சல், கண்புகைச்சல், கண்ணிலிருந்து நீர்வடிதல், ஒருதலைவலி, இருதலைவலி, பீனிசம், காதினுல் சீழ்வடிதல், காது இரைச்சல், காதுவலி, ஐந்துவருஷத்திற் குட்பட்டதாயும் இரைச்சலோடுங் கூடிய காதடைப்பு, கரப்பன், தேமல், சிரசில் மயிர் உதிர்தல், சொண்டுவிழுதல் முதலான ரோகங்களை நிவர்த்திப்பதுமன்றி மயிரை நன்றாய் வளரச்செய்யும். இந்த நோட்டீசில் காணப்படாத கழுத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளையும் அனுகூலப்படுத்தும். மேற்கண்ட வியாதியில்லாதவர்கள் தேய்த்து ஸ்நானம்பண்ணினுல் தேகத்திற்குக் குளிர்ச்சியையும் ஆரோக்கியத்தையும் கொடுக்கும். வாரத்திற்கு இரண்டுதடவை காலை 8 மணிக்குள் வெந்நீரில் சீயாக்காய்தேய்த்துஸ்நானஞ்செய்து யாதொரு பத்தியமுமின்றி உடனே போஜனஞ் செய்துகொள்ளவேண்டும். 8 நாள்வரையிலும் சுகந்தம் மாருது. அன்று பகலில்மாத்திரம் தூங்கக்கூடாது. 10 பலங் கொண்ட புட்டி 1-க்கு கிரயம் ரூபா 1—10—0.

கும்பகோணம்
வி. எஸ். கோமளாந்தம்மாள்,
மானேஜர்,
8, பிராடீஸ் ரஸ்தா, மைலாப்பூர்.

(Y. 26.)

# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— ருதிரோற்காரி௵ தைமீ 18௳ வியாழக்கிழமை.

## இங்கிலாந்தில் தொழிற் கட்சியாரின் பரிபாலனம்.

இங்கிலாந்தில் இதுகாறும் "லிபறல்" "கன்ஸர்வேட்டிவ்ஸ்" என்னும் இருகட்சியாருமே மாறிமாறி ஆதிக்கமடைந்து இராச்சியத்தை நடத்திவந்தனர். ஆனால் இப்பொழுது தொழிலாளர் கட்சியார் ஆதிக்கமடைந்திருக்கின்றனர். இங்கிலாந்தில் இதற்குமுன் எக்காலத்திலாயினும் இவ்விதமான மாறுதல் உண்டானதில்லை. இம்மாறுதல் நன்மைக்கோ தீமைக்கோ நாமறியேம். ஆனால் காலகதியிற் றெரியும். சிலநாட்களின்முன்னர் நிகழ்ந்த பாராளுமன்றத் தெரிவில், இதுகாறும் பரிபாலனஞ் செய்துவந்த கன்ஸர்வேட்டிவ் கட்சியார் அபஜெயமுற, 'லிபறல்' கட்சியாருடைய உதவியைக் கொண்டு தொழிற் கட்சியாரே வெற்றியடைந்தனர். சம்மதஞ் சொல்வோருள் 72 பேருடைய சம்மதம் மேலதிகமாகத் தொழிற் கட்சியாருக்குக் கிடைத்தது. புதிய பரிபாலனத்தில் மிஸ்டர் ரும்ஸே மைக்டொனல் என்பவர் ஆங்கிலமந்திரியாகவும், ஸேர் சிட்னி ஒலிவர் என்பவர் இந்தியமந்திரியாகவும், மிஸ்டர் J. H. ரொமஸ் என்பவர் குடியேற்றநாடுகளுக்கு மந்திரியாகவும், இந்திய பிரதிகாவலராயிருந்த லார்ட் செம்ஸ்வோர்ட் கடற்படைத் தலைவராகவும் நியமனம் பெற்றனர். இந்திய மந்திரியாக வருவரென எவரும் எதிர்பார்த்திருந்த கேணல் வெஜ்வூட் லான்காஸ்ரர் என்னுமிடத்திற்குத் தலைமை உத்தியோகத்தராஞர். மிஸ்டர் J. H. ரொமஸ் என்பவரே இலங்கை மந்திரியுமாவர்.

இத்தொழிற் கட்சியாருடைய பரிபாலனம் ஆங்கிலருக்கேபுதிதாதலால், இவர்கள் எவ்வாறு பரிபாலிப்பாரென்பதைப்பற்றி இப்பொழுது எவருஞ் சொல்லுதல் முடியாது. ஆனால் புதிய மந்திரி "பரிபாலன முறையில் யாதும் மாறுதல் செய்வதில்லை" எனக் கூறியிருக்கின்றனர். தொழிற்கட்சியார் ஆதிக்கமடைந்தால் இந்தியாவுக்கு ஏதும் நன்மை உண்டாகுமென இந்தியர் எதிர்பார்த்திருக்கின்றனர். இந்தியாவைப்பற்றிப் புதிய மந்திரி கூறும்போது, இந்திய அபிமானிகள் அரசினருடன் மாறுபட்டு எவ்வகையான நன்மையையும் அடைதல் முடியாதென்று கூறிவிட்டனர். இத்தொழிற்கட்சியார், தங்களை இந்த உயர்ந்த நிலையில் வரச்செய்த லிபறற் கட்சியாருக்குக் கட்டுப்பட்டவர்களாகவிருக்கின்றார்கள். அங்ஙனமிருத்தலினாலே அதிக மாறுதல்கள் உண்டாகமாட்டாவென்பது பலருடைய அபிப்பிராயம். கபினற் எனப்படும் மந்திரசபையில் இப்பொழுதிருப்பவர்கள் சிறந்த ராசதந்திரிகளென்றும் கல்வியறிவுள்ளவர்களென்றுஞ் சொல்லப்படுகின்றது.

---

### மோட்டோர் ரத அபாயம்.

யாழ்ப்பாணத்திலே மொட்டோர்பஸ்சும் மொட்டோர்ரதங்களும் ஒவ்வொரு நாளும் அதிகரித்துக்கொண்டு வருகின்றன. இதன்பயனாக அபாயங்களும் சீவமோசமும் அதிகமாகின்றன. எங்கள் தெருக்கள் மொட்டோர்வண்டிகள் இங்கு வருவதற்குமுன்னர் எவ்விதமாகப் பழுது பார்க்கப்பட்டு வந்தனவோ அவ்விதமாகவே இப்பொழுதும் செப்பனிடப்படலாயின. ஆனாற் பழுதுபார்க்கப்பட்ட இரண்டொரு மாதத்திற்குள் குன்றும், குழியும் எவ்வெவ்விடங்களிலும் அதிகமாகின்றன. இங்கு ஓடும் மொட்டோர் ரதங்களினால் மேலே எழும் தூசை ஒருவாறு மண்மாரி என்று சொல்வதிற் குற்றம் ஏற்படமாட்டாது. ஒரு ரதம் தெருவில் ஓடியவுடன் அங்கு எழும் தூசிப்படலமானது முகில்கள் ஒருங்கு சேர்ந்து ஒரு மலையிற் படிவதுபோன்ற தோற்றத்தைக் கொடுக்கிறது. இத்தூசிப்படலம் நீங்குவதற்கு ஏறக்குறைய ஐந்து நிமிஷங்கள் வரையிற் செல்லும். அத்தருணத்தில் தூசிப்படலத்துள் அகப்பட்டவர்களுக்கு உலகத்திலுள்ள ஒரு பொருளுங் கண்ணுக்குப் புலப்படாது. சில தருணங்களில் பிரக்ஞையற்றிருக்க வேண்டியும் நேருகின்றது. தூசிப்படலத்துள் அகப்பட்டுத் தத்தளிக்கும் தருணத்தில் பின்னுமோர் ரதம் வருமாயின் அதில் அகப்பட்டவர்களெல்லாரும் அந்த ரதத்திற் கிரையாவர் என்பது திண்ணம். இவ்வித கஷ்டமும் மரணமும் இடைவிடாது நேருவது கண்ட எங்கள் காருண்ய அரசினர் இலங்கையில் இந்த வடமாகாணத்தை ஒழிந்த ஏனையமாகாணங்களில் மொட்டோர் இரதங்கள் போக்குவரவு செய்வதற்காகப் பிரத்தியேகமான தெருக்களைக் குறித்திருப்பதை இந்த ஜெனவரிமீ 18௳ வெளிவந்த கசற் பத்திரிகைவாயிலாக அறியலானேம். இங்கு சன நெருக்கமான தெருக்களும் அதிகமான மொட்டோர் ரதங்களும் இல்லையென்று கருதிப்போலும் நாங்கள் அவ்வித சலாக்கியம் கிடைக்கப் பெறுதொழிந்தேம். இங்கும் ஜன நெருக்கமுள்ள தெருக்கள் உண்டென்பதையும் எண்ணற்ற மொட்டோர்ப் போக்குவரவு உண்டென்பதையும் இடையிடையே அபாயமும் சீவமோசமும் நேர்ந்து கொண்டு வருகின்றன என்பதையும் எங்கள் காருண்ய அரசினர் சிந்தித்து எங்களுக்கும் அவ்வித சிலாக்கியத்தை அவசியம் செய்தல்வேண்டும். அவ்வாறு செய்வதில் சனவரத்துப்போக்கு குறைவான தெருக்களையே நியமித்து விடுதல் வேண்டும். பட்டினத் தெருக்களிலே இந்த மொட்டோர் ரதங்கள் சுழல்காற்றுப்போல அங்குமிங்கும் ஓடும் பொழுது உண்டாகும் "மண்மாரி"யினால் இங்குள்ளார் கூடிய சீக்கிரத்தில் கட்பார்வையையும் இழந்து கயரோகத்துக்குக்கும் இரையாவர். இவ்வித அபாயத்திலும் சீவமோசத்திலுமிருந்து மீளச் செய்வது எங்கள் அரசினருடைய கடமையாகும். நூதனவாகனங்கள் இங்குவந்து பரம்பும் இக்காலத்தில், (தூசிப்படலத்தைத் தடுக்கும் பொருட்டு கொழும்பு கண்டி முதலிய இடங்களில் உபயோகப்படுத்தப்படும்) தண்ணீர் தெளித்தல் போன்ற முறைகளில், ஒன்றையேனும் இங்கு உபயோகப் படுத்துதல் மிகச் சிறந்ததாகும்.

---

### வீண் வதந்தி.

யாழ்ப்பாணத்துள்ள அந்நிய நாட்டு மதுபானக் கடைகளை விலக்கும்பொருட்டு, தலைவரிப்பணங் கொடுப்போருள் நூற்றுக்கு அறுபது பெயர் விகிதம் சம்மதஞ் சொல்வரேல் இங்குள்ள கடைகள் அகற்றப்படுமென்று அரசினர் செய்த அனுமதியின்படியே இந்த ஜனவரிமீ 19௳ யாழ்ப்பாணத்திலுள்ளவர்களாற் சம்மதஞ் சொல்லப்பட்டது. சம்மதஞ் சொன்னவர்களின் விகிதம் 68 ஆகும். இதன்படி இங்குள்ள அந்நிய நாட்டு மதுக்கடைகளெல்லாம் வருகிற செப்டெம்பர் மாதத்தோடு அகற்றப்படும். இப்படியிருக்க தேசாபிமானமில்லாத சில உத்தியோகத்தர்களும், வேறு சிலவீணர்களும் ஊரவர்கள் சம்மதஞ் சொன்ன பின்னரும் இந்த மதுக்கடைகள் அகற்றப்படமாட்டாவெனப் பொய் வதந்தி பரப்பியமையால் அபிமானிகள் சிலர் எம்மை நேரிற் கண்டு விஷயம் உண்மைதானோ என வினவத் தலைப்பட்டனர். ஊரவர்கள் மனசில் அவ்வாறான சந்தேகம் உண்டாகாதபடி, நமது வடமாகாண ஏஜண்டரவர்கள் மதுவிலக்குச் சங்க காரியதரிசியாகிய மிஸ்டர் J. K. சண்முகமவர்களுக்கு எழுதிய கடிதத்தை இங்கே மொழி பெயர்த்துத் தருகின்றேம்:

"ஐயா,

1923-ம் ஆண்டு நவம்பர்மீ 28௳ எழுதிய கடித விஷயமாகத் தங்களுக்குத் தெரிவிக்கவேண்டியது, யாழ்ப்பாணத்தில் தலைவரிப்பணங் கொடுப்பவர்களுள் நூற்றுக்கு அறுபதுபெயர்விகிதம் அந்நியநாட்டு மதுக்கடைகள் வேண்டாமெனச் சம்மதஞ்சொன்னால், அந்நியநாட்டு மதுக்கடைகள் அகற்றப்படுமென்பதை உத்தம தேசாதிபதியவர்கள் சட்ட நிர்வாக சபையாரின் அங்கீகாரத்துடன் தெரிவித்திருக்கின்றார்கள்.

L. W. C. சிறடர்.

---

## உலகம் பலவிதம்.

பிறண்டி உவிஸ்க்கி ஜின் சம்பேயின் ஆகிய நால்வரும் ஒருங்கு சேர்ந்து தங்களுக்கு நேர்ந்த பேராபத்தை நினைந்து நினைந்து மனவருத்தப்பட்டுக்கொண்டு யாழ்ப்பாணம் முற்றவெளியிலிருந்து வடக்குத் திசையை நோக்கி நடந்து நல்லூரை யடைந்தார்கள். அந்நிய நாட்டினராதலின், இவர்களுக்கு ஆறுதல் சொல்வா ரொருவருமில்லை. நல்லூரிலே கைக்கோளதெருச் சந்தைக்குச் சமீபத்தில் ஊர்ப்பிறந்தவனாகிய சாராயம் என்பவனைக் கண்டு தங்களுக்குண்டான கொடிய நோயைப்பற்றிக் கூறிப் பிரலாபித்தார்கள். சாராயம் என்பவன் "ஐயா பெரியவர்களே உங்களுக்கு இப்படியான பேராபத்து வருமென்று நான் ஒருபோதுங் காத்திருக்கவில்லையே. உங்களுக்காகப் பரிதாபப்பட்டு நான் தான் என்ன செய்ய முடியும். என்னுடைய பாடும் திண்டாட்டமாகவே யிருக்கிறது" எனக் கூறினன். அவர்கள் சாராயம் என்பவனைப் பார்த்து, "அண்ணே, உனக்குக் கோடி புண்ணியமுண்டு. நாங்களோ அந்நியர். இந்த ஊர் நடப்புத் தெரியாது. எங்களுடைய நோயை நீக்கக்கூடிய ஒரு உபாயஞ் சொல்லுதி" என்றனர். "அண்ணைமாரே! உங்களைப் பரிசோதித்த வைத்தியர்கள் உங்கள் நோய் மரணத்துக்கேதுவானதென்றும், இந்தக் கிழமை அல்லது மற்றக் கிழமைகளிற் கொல்லமாட்டாதென்றும், படுத்த பாயோடு ஐந்து ஆறு மாதங் கிடந்து இழுபடவேண்டி வருமென்றும் அபிப்பிராயப்படுகின்றார்கள் என அறிகின்றேன்" என்றான். அவர்கள் "அண்ணே, உனக்கு என்னமாதிரியான நோயிருக்கிறது?" என்றனர். சாராயம் என்பவன் சொல்லுகிறான். "என்னுடன் கூடப்பிறந்த சகோதரர் அநேகர். அவர்களெல்லாரும் சென்ற இரண்டுமூன்று வருஷங்களில் இரத்தாசயம் திடீரென நிற்றல் (Heart failture) என்னும் நோயினால் ஒருவர் பின்னொருவராக மாண்டுபோனார்கள். எனக்கும் அதேகதிதான் கிடைக்குமென்று நினைக்கிறேன். எனது நண்பரிற் சிலர் நான் இந்த இடத்திலிருந்தால் அந்தநோயே வருமென்றும், இந்த இடத்தை மாறி வேறிடத்தில் இருப்பது நல்லதென்றும் சொல்லுகிறார்கள். எந்த இடம் நல்லதென்று கேட்டேன். அதற்கு அவர்கள் உரும்பராய்ப் பகுதியில் இருந்தால் எனது உடம்புக்கு நல்லதென்று சொல்லுகிறார்கள்" எனக் கூறினன்.

* *

இது கேட்ட நால்வரும் சாராயம் என்பவனை நோக்கி, "அண்ணே! எங்களுக்கும் ஓர் உய்யும்வழி காட்டுதல்வேண்டும்" எனக் கேட்க, அவன் அவர்களை நோக்கி "இந்தத் தெருவழியே குறுக்கே வருந் தெருக்களிற் பிரவேசியாது, நேடுக வடதிசை நோக்கிச் செல்லுவீர்களாயின் வல்லைவெளியைக் காண்பீர்கள். அங்கிருந்து பின்னரும் வடதிசை நோக்கிச் செல்வீர்களாயின் வடமராட்சி என்னும் பகுதியும் அப்பிரிவுக்குத் தலைபோல விளங்கும் பருத்தித்துறை என்னும் பட்டினமுந் தென்படும். அங்கு நீங்கள் உங்கள் மனம்போல நீடூழிகாலம் வாழலாம். அங்குள்ளார் உங்களை நல்வரவேற்பார்கள். உங்களுக்காக நாலுபகுதிகளிலும் உபசரணைக் கூட்டங்கள் நடத்துவார்கள். அங்கு நீங்கள் உட்பிரவேசித்துச் செய்யும் அமிர்தப் பிரசங்கங்களை ஆண்களும் பெண்களும் சிறுவரும் சிறுமியரும் வேற்றுமையின்றிச் செவி மடுப்பார்கள்" எனக் கூறினன்.

* *

இதனைக் கேட்ட நால்வரில் உவிஸ்கி என்பவன் சொல்லுகிறான்; "அண்ணே, நான் ஒரு பிரபல சாஸ்திரியாரிடம் எனது நயநட்டங்களைப் பற்றிக் கேட்டபோது அவர் சப்தரிஷிவாக்கியத்திலிருந்து எனது இப்பிறப்பைப் பற்றிக் கூறியதாவது:—

"இன்னவன் மேனாட் டிங்க
ணெழிலுறு மிஸ்கொற் லாந்து
தன்னிடைப் பிறந்து தேசத்
தாய்தமர் தம்மை விட்டுப்
பின்னரப் பறங்கிக் காரர்
தமைப்பெருந் துணையாய்க் கொண்டு
மன்னுவ னீழ நாட்டின்
வளமிகு மியாழ்ப்பா ணத்தில்".

"மறங்களை வளர்ப்பன் செல்வர்
தம்மையும் வறுமை யாக்கி
அறங்களைச் சிதைப்பன் வாழுங்
குடிகளை யழித்து நிற்பன்
கறங்கெனச் சுழன்று காமங்
கொலைகளை யாதி செய்வ
னுறங்குவ தின்றி யந்த
வூரெலாம் நாசஞ் செய்வன்"

"...............இந்த வரி...........
........சிதைந்துவிட்டது............
அண்டிடும் ருதிரோற் காரி
யாண்டினிற் பகைக ளுண்டாம்
மண்டிடு மிராச ரோகம்
வருத்திட வடம ராட்சி
கண்டதிற் சிலநாள் வைகிக்
காலன்கைப் படுவன் மாதோ"

இதனைக் கேட்டபின் இக்காலமே எனக்கு மாரக திசை என்றும், இந்நோயே மரணத்துக் கேதுவானதென்றும் நம்புகிறேன். என்ன செய்யலாம்; எல்லாம் விதிப்படியாகும். ஏதோ தப்பி யொட்டிச் சீவனோடிருந்தால் அடுத்த புரட்டாதி ஐப்பசிவரையில் இந்தப்பக்கம்வருவேன் தானே. மோட்டோர்பஸ்வசதியாக இருக்கிற பொழுது நினைத்தவுடன் வரலாம் நினைத்தவுடன் போகலாம்" என்றான். இதைக் கேட்ட சாராயம் என்பவன் "அண்ணைமாரே, வேண்டுமானால் இந்த ஐந்து ஆறு மாதமும் நீங்கள் என்னோடும் இருக்கலாம். இந்த ஊரில் வேறெந்த விடத்திலுமிருக்கலாம். அதன் பின் நீங்களிங்கு வருவீர்களாயின் இங்கே யுள்ளவர்களில் யார் கண்டாலும் உங்களைக் கொன்றுவிடுவார்கள். ஆனபடியினால் ஏதோ நோய்க்குப் பேய்க்குத் தப்பித் தவறிவிட்டீர்களானால் பருத்தித்துறையி லிருந்து ஒரு கட்டுமரத்தையாவது பிடித்து அதிலேறிக்கொண்டு உங்களூர் போய்ச் சேருவதே நல்லது" என்று கூறி விடை கொடுத்தனுப்பினன்.

---

## சமாசாரம்.

நமது ஆங்கிலப்பத்திரிகாசிரியர்:—இந்துசாதன ஆங்கிலப் பிரதியின் கௌரவ பத்திரிகாசிரியராகிய ஸ்ரீமான். அ. சபாபதியவர்கள் சிறிது சுகவீனங்காரணமாக கிரிமலையிற் சென்றுவசிக்கின்றனர். அவர் பூரணசுகமடைந்து தமதுகடமையை ஏற்று நடத்தும் வண்ணந் திருவருள் முன்னிற்பதாக.

மோட்டர் வண்டியால் நேர்ந்தமரணம்:-இந்த ஜனவரிமீ 24௳ தென்மராட்சி மணியகாரனுடைய மொட்டர் ரதம் சாவகச்சேரித் தெருவிற்போய் ஒரு சந்தியாலே திரும்பும்போது எதிரே வந்த இருபெண்களை நெரித்துவிட ஒருத்தி உடனே இறந்தாள். மற்றவள் ஆபத்தானநிலையில் கிடக்கின்றாள். இப்பெண்களிருவரும் கைதடியைச் சேர்ந்தவர்கள். சாவகச்சேரிச்சந்தையிற் சாமான் வாங்கிக்கொண்டு வீட்டுக்குப் போகும்போதே இவர்களுக்கு இந்தக்கதிநேர்ந்தது.

வேலணை ஸ்ரீ. மகாகணபதிப்பிள்ளையார் கோவில்:—வேலணையிலுள்ள இந்தப் புராதன ஆலயத்தைக் கருங்கற் றிருப்பணியாக நிறைவேற்றும் பொருட்டு அங்குள்ள புண்ணியசீலர்கள் சிலர் ஆரம்பித்து முயற்சிசெய்துவருகிறார்கள். இச்சிவபுண்ணியத்திற் றலையிட்டிருப்பவர்கள் திருப்பணியை முற்றுவித்தற்குப் பொருள் சேர்க்கும்படி புறப்படுகின்றார்கள். அவர்கள் கடவுட்பக்தி கல்வியறிவொழுக்கம் களிற் சிறந்துள்ளவர்கள். வெளியூர்களில்வசிக்கும் சைவசமய அபிமானிகளாயுள்ளவர்கள் இத்திருப்பணியின் பொருட்டு இயன்ற திரவிய சகாயஞ் செய்து இதனை முற்றுவித்தல்பெரும் புண்ணியமாகும். இத்திருப்பணியைப் பற்றிய விளம்பரத்தைப் பத்திரிகையிற் பிறிதோரிடத்திற்காண்க.

ஆங்கில கப்பற் படை:— சென்ற சனிக்கிழமை பகல் மூன்று மணியளவில் ஆங்கில கப்பற்படை திரிகோணமலைக்கு வந்துசேர்ந்தது.

கண்டியிற்கடின ஜலதோஷம்(influenza)—இக்கடின ஜலதோஷம் கண்டிப்பகுதியிற் பரவியிருக்கிறது. அங்குள்ள பள்ளிக்கூடமாணவரிற் பெரும்பாலார் இந்நோயினாற் பிடிக்கப்பட்டனர்.

துவக்கினால் நேர்ந்த துக்கசம்பவம்:—சென்றகிழமை மிரிகமம் என்னும் இடத்துக்குச் சமீபமாயுள்ள மினிஒலுவா என்னும் கிராமத்தில் வசிக்கும் மூவர் வெற்றிலைத்தோட்டத்தின் வேலிக்காகச் சிறுதடிகள் வெட்டும் பொருட்டு காட்டிற் புகுந்து அங்கு தங்கள் வேலையைச் செய்யும் பொழுது பொறியில் ஏற்றப்பட்டிருந்த துவக்குக் கிரையாகி ஒருவன் உடனே உயிர்துறந்தான். ஒருவன் கடுங்காயமுற்றான்.

சமையலறையிற் காணப்பட்ட பிரேதம்:—கொழும்பிலே ஸ்கின்னர் வீதியிலுள்ள ஒரு வீட்டைவாடகைக்கு வாங்கும் பொருட்டு ஒருவர் அவ்வீட்டுச் சொந்தக்காரனுடன் சென்று அறைகளைப் பார்க்கும் பொழுது சமையல் அறையின் நிலம் சற்றேபுதைந்தது. அந்தநிலத்தைத் தோண்டிப்பார்க்கும் பொழுது அங்கு ஒரு பெண்ணின் எலும்புக் கோர்வை காணப்பட்டது. இச்செய்தி உடனே மருதானைப் பொலிசாருக்குத் தெரிவிக்கப்பட்டது.

---

### நூல்களைப்பற்றிய குறிப்பு.

"பிரபஞ்சதாரகை" அல்லது மானிடர் முன்னேற்றம்:—இந்நூல் சென்னை இராயப்பேட்டை வெஸ்லியன் கல்லூரிச் சரித்திர போதகாசிரியர் ஸ்ரீ. வை. சூரியநாராயண சாஸ்திரி M. A L. D. அவர்களால் தமிழ்வசனநடையி லெழுதப் பெற்ற ஒரு சிறந்த நூலாகும். இந்நூலை சத்து, உணவு, உறக்கம், உறைவிடம், பாத்திரம், தற்காப்பு, உடையும் அலங்காரமும், விவாகம், இல்வாழ்க்கை முதலிய 17 வியாசங்கள் நன்கு எழுதப்பட்டுள்ளன. இந்நூல் வித்தியாசாலை மாணவராலும் மற்றுந் தமிழ்மக்களாலும் இனிதுபடிக்கத்தக்கது. பிரதிகள்சென்னை 4-ம் இல. கொண்டி செட்டிதெரு V. நாராயணன் கம்பனியாரிடம் பெறற்பாலன.

விவேகபோதினி:—இது 16 வருடகாலமாக நடைபெற்று வரும் சஞ்சிகை ரூபமான ஒரு சிறந்த மாதாந்த பத்திரிகை. பல அறிஞர்களால் எழுதப்பட்ட அரிய வியாசங்கள் இப்பத்திரிகையிற் காணப்படுகின்றன. பிரதிகளும் அழகுறஅச்சிடப்பெற்றுள்ளன. இதன் வருஷச்கிரயம் ரூபா 5. பத்திரிகையைப் பெற விரும்புவோர் மானேஜர் விவேகபோதினி, மயிலாப்பூர் சென்னை என்றும் விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாகும்.

தமிழ்நாடு:—இது மதுரையிலிருந்து புதிதாக ஆரம்பிக்கப் பட்டு நடைபெறும் ஒரு சஞ்சிகை ரூபமான தமிழ்மாதாந்தபத்திரிகை. இதன் ஆசிரியர் ஸ்ரீ சு. ஸ்ரீநிவாசஐயங்கார். இதன் வருட சந்தா வெளிநாடுகளுக்கு ரூபா 3. எமக்கனுப்பிய புத்தகத்தையும் பத்திரிகைகளையும் நன்றியறிதலுடன் ஏற்றோம்.

## சுபோதத் துணுக்கைகள்.

(வண்ணைநகர்
ஸ்ரீ க. வைத்தியலிங்கபிள்ளை
எழுதியது)

### மனக்குரங்கை அடக்கினவனே மகான்.

ஒருவன் முப்பத்திரண் டறங்களையுஞ் சந்ததமும் புரிவானாயினும், திரிகாலமுந் தவறாது கடவுளை வழிபடுவானாயினும், இந்திரியங்களையொடுக்கி, இரேசகபூரககும்பகங்களால் பிராணவாயுவை நிறுத்தி யோகாப்பியாசஞ் செய்வானாயினும், உலகிலுள்ள சிவஸ்தலங்கட்கெல்லாஞ் சென்று தரிசித்தானாயினும், இமசேது பரியந்தமுள்ள புண்ணிய தீர்த்தங்களில் ஆடினானாயினும், அடங்கிய தூய மனமற்றவனுக்குப் பொருட் செலவுந் தேக சிரமமுமன்றி எட்டுணையும் பிரயோசன மெய்தமாட்டாது. உலகப் புகழே அதற்கு வைமாறாக முடியும். மன அடக்கமே இம்மை மறுமை இரண்டிலும் நன்மை பயக்கற்பாலது. மாந்தருக்கு மனமே சிறந்த கருவியாகக் கொள்ளப்படும்; ஆதுபற்றியே மனதுக்கு "இந்திரியராஜன்" என்று ஒரு நாமங் கூறப்படுகின்றது. இந்த மனம் அடங்குமேயானால், ஆகாத காரிய மொன்றுமில்லை. மனம் அடங்கப்பெற்றமையாலன்றோ முனிவர்கள் அட்டமாசித்திகளுமெய்தப்பெற்று திரிகாலக்கியானிகளாக விளங்குகின்றார்கள். அத்தகையோரே பரம்பொருளாகிய சிவத்தையும் அகக்கண்ணால் தரிசிக்கத்தக்கவர்கள். மனத்தூய்மை யுடையவன் தேவாம்சமாய் இம்மையிலும் விளங்குகின்றான். அஃதில்லாதவன் மிருகங்களினுங் கேடாகி, இராக்கத அம்சமடைந்துவிடுகின்றான். மனம் அடங்கப்பெற்றோன் கிருகத்தாச்சிரமத்திலிருந்து மனைவி மக்களோடு கூடி வாழினும், "கமல நீர் போல" ஒன்றினுந் தாக்குறாது சந்ததமுஞ் சிவத்தியானத்தோடு சீவிப்பன்; அங்ஙனம் மனம் அடங்கப்பெறாதவன் துறவியாக வெளிப்பட்டுத் துட்ட மிருகங்கள் செறிந்த அடவியையடைந்து பஞ்சாக்கினி மத்தியில் நின்று தவம் புரியினும் ஒரு பெறுபேற்றையும் அடையமாட்டான். சிந்தையை ஒரு வழியில் நிறுவிய தீரனே, பகைவனையும் நண்பனையும், ஓட்டையும் பொன்னையும், மிடியையும் செல்வத்தையும், கீர்த்தியையும் நிந்தையையும், வீட்டையும் காட்டையும், அனுத்தினையும் வேற்றுமையின்றிச் சமமாக நோக்குவன்; அவனே பிறவிவேரை யறுத்தவன்; அவனுக்குப் பாமுத்தி கைவல்யமாகும். அத்தகையோன் பிறப்பிறப்பற்ற மலரகிதராகிய சிவபிரானது குஞ்சித பாத நீழலையேயன்றி, இந்திரப்பட்டத்தையுந் திரணமாக மதிப்பன். மனம் அடங்காதவன் கற்ற அற்ப கல்வி மற்கடத்தின் கையிற் கொடுத்த (உற்கை) கொள்ளிக்கட்டையை யொக்கும். மனம் அடங்காத குரு உலகிலுள்ளவர்களனைவரையுங் கடலில் நின்றுங் கரையேறச் செய்து, தான் அல்லும் பகலும் அளக்கரிடை கிடந்து அலமரும் (நாவாய்) மரக்கலத்தை யொத்திருக்கின்றான். அவன் கொண்ட வீசை தாடி முதலியன காட்டிற் சஞ்சரிக்குங் கரடியின் மயிரை யொக்கும். அவன் கண்ணை மூடிக்கொண்டு செபிக்குஞ் செபமானது, பகல் முழுதும் மரப்பொந்தில் கண்ணை மூடி மௌனமாயிருக்கும் ஆந்தையினுடைய தன்மையை யொத்திருக்கும். மனம் அடங்கினவனுடைய செய்கையும், அடங்காதவனுடைய செய்கையும் ஒன்றாயிருப்பினும், ஒன்றுக்கொன்று மாறுபட்டே யிருக்கும். அது எங்ஙனமெனின், ஒரு பெண்ணினுடைய தனம் மகவு வருடும்போது பாலையும், நாயகன் தீண்டும்போது இச்சையையுங் கொடுக்கின்றதன்றோ! மனத்தூய்மை உடைமையாலும், இன்மையினாலும் அல்லவா இரண்டு நண்பர்கள் கூடிச் சென்று ஒருவன் தாசி வீட்டுக்கும், மற்றவன் தேவாலயத்துக்கும் போய்த் தாசி வீட்டுக்குப் போனவன் மோக்ஷத்தையும், தேவாலயத்துக்குப் போனவன் நரகத்தையு மடைந்தார்கள். இதற்குத் திருட்டாந்தமாக ஓர் சிறிய சரிதை கூறுகின்றேன். அது வருமாறு:—

"போஜராஜனுடைய சபை வித்துவான்களுட் சிரேஷ்டராகிய காளிதாசன்மீது மற்ற வித்துவான்கள் அழுக்காறுற்று, இருவருக்கும் மித்திரபேதஞ் செய்யக் கருதி, ஒருநாள் அரசனை அரண்மனையிற் போய்ச் சந்தித்து, மாட்சிமை தங்கிய அரசரேறே, தங்கள் சிரேஷ்ட வித்துவானாகிய காளிதாசர் பிராமணனாயிருந்தும், சந்தியாவந்தனம் சிவபூசை ஒன்றுமின்றி கீச்சுரவாதிபோலச் சதா தாசிவீட்டிலேயே கிடக்கின்றார். இராசசபைக்கு வரும்போது மாத்திரம் விபூதியைத் திரிபுண்டரமாகத் தரித்துக்கொள்ளுகிறார். அவருடைய வெளிவேடத்தைக் கண்டு பெரிய பத்திமானென்று விசுவசிக்கின்றீர்கள்; பரீட்சித்துப்பார்த்தால் உண்மை விளங்குமென்று கூறினார்கள். அம்மாற்றத்தைச் செவியுற்ற அரசன் மிகுந்த இறும்பூதெய்தித் தாசியை இரகசியமா யழைப்பித்துக் காளிதாசனுடைய ஒழுக்கங்களை விசாரித்தான். அதற்கு அவள் மகாராசாவே! அவர் ஒரு பூசைப் பெட்டியை வைத்திருக்கிறார். அதிலுள்ள சிவலிங்கத்தை விதிப்படி பூசிப்பதாகத் தெரியவில்லை. அவருடைய செய்கைகளைப் பார்த்தால் ஒன்றிலும் பற்றில்லாத விளையாட்டுப் பிள்ளை போலக் காணப்படுகின்றார் என்றாள். அரசன் அவருடைய உண்மைநிலையை அறிய அவரையறியாது பூசைப்பெட்டியைத் தாசியைக் கொண்டெடுப்பித்துத் தனதுபெட்டியிற் பூட்டி வைத்துவிட்டான். மறுநாட் காளிதாசன் சிவபூசைசெய்வதற்குப்பூசையறையிற்போய்ப்பார்த்தபோது பூசைப்பெட்டியைக் காணாமல் வருந்தி பாவனா பூசைசெய்து போசனம்முடித்துக் கொண்டு சபைக்கு வந்தார். இவரைக் கண்டவுடன் அரசன் ஓய்கவிவாணரே! இன்றைக்குச்சிவ பூசைசெய்துதான் சாப்பிட்டீரா? என்றுவினாவினான். பூசை முடித்துத்தான் சாப்பிட்டேனென்றார். அதைக்கேட்டமன்னன் மந்தகாசஞ்செய்து எவ்வித பத்திர புஷ்பங்களினால் அருச்சித்தீரென்ன, வில்வத் தழையாலும் நந்தியாவர்த்த மலராலும் பூசித்தேனென்றார். உடனே வேந்தன் காளிதாசனை நோக்கி வடநூற்கடலை நிலைகண்டுணர்ந்த மேதாவியாகிய நீர் இத்தகைய அபாண்டமாகியபொய்யைக் கூறலாமா? என்று வெகுளியுற்று, பூசைப்பெட்டியை எடுப்பித்துத் திறந்து பார்த்தபோது, அபிஷேகம்பண்ணிய திருமஞ்சனமும் காயாமல் அவர் சொன்ன பத்திர புஷ்பங்களால் அருச்சித்திருப்பதை அரசன் கண்ணுற்று அந்தோ! இம் மகானுடைய பெருமையை அறியாமல் பரீட்சித்துவிட்டேனேயென்று மிகுந்த பச்சாத்தாப மடைந்து, தான் அறியாமற் செய்த பிழையை மன்னிக்கும்படிகேட்டு அவருடைய ஆசியைப் பெற்றுக் கொண்டான்."

சகோதர சகோதரிகளே, மனமடங்கிய மகானுடைய மகத்துவத்தைக் கண்டீர்களா? நாங்களும் மனக்குரங்கின் சேட்டையி லெடுபட்டுப் பாவவழியி லொழுகாது நாளுந்நாளடக்கித் தூய சிந்தை யுடையராகிப் பசுபதியாகிய எம்பெருமானது பாதாம்புயங்களை அநுதினமும் அன்போடு வழிபட்டு உய்யக்கடவோமாக.

## கடிதம்.

### "ஆங்கிலக்கல்வியும் நம் சிறார்களும்."

நம் தாய்நாட்டில் வரவரப் பஞ்சம் அதிகரித்து வருகிறதற்கு முக்கிய காரணம் என்னவென்று ஆராயுங்கால் இக்கால ஆங்கிலக்கல்வியென்றே சொல்லுதல் வேண்டும். ஏனெனில் ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் தங்கள் பிள்ளைகளைத் தாங்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டு, கூடியவரையிலுந் தெண்டித்து ஒருத்தியோகிக்கிறதற்காவது படிப்பித்து வைக்கவேண்டுமெனக் கருதி ஏழாம் எட்டாந் தரவரையில் படிப்பித்து வைக்கின்றனர். சிறுவர்கள் தாங்கள் அப்படிச் சற்றவுடன் ஏதோ அரைத்துரைமார்களாய்விட்டதாக நினைந்து தமது கமத்தொழிலைச் செய்ய அருவருக்கின்றனர்.

அவர்களை அதற்குமேற்படிப்பித்துக்கொள்ள என்றாலோ பெற்றோரிடம் பணமில்லை. சிறுவர்கள் உத்தியோகஞ் செய்ய என்றாலோ படிப்புப்போதாமல் இடைநடுவில் கிடந்து தத்தளிக்கின்றனர். ஐயோ! என்ன பரிதாபம்!

இம்மட்டோ இவர்கள் தங்கள் தலைகளையும் மொட்டையடித்துக்கொண்டும் பெற்றோரை எவ்வளவோ கஷ்டத்துக்கும், கடனுக்கும் ஆளாக்கியும் தாங்கள் நல்ல வெள்ளை வேட்டிகளுஞ் சருகைச் சால்வைகளும், பனியன் சேட் கோட்டுகளும், கைலேஞ்சி முதலிய நாகரீக உடைகளையும் தேடிக்கொள்ளுகிறார்கள்.

மேலும் சாப்பாடென்றாலோ நாங்கள் சாப்பிடுஞ் சாப்பாடு அவர்களுக்குச் சரிவரமாட்டாது. அவர்களுக்குப் படுத்த படுக்கையில் இருக்கும்போதே காப்பி கொடுக்கவேண்டும். பின் கால் முகஞ் சுத்திசெய்து, தலைசீவியவுடன் பலகாரமுங் காப்பி அல்லது தேய்த்தண்ணீருங் கொடுக்கவேண்டும். மறுபடி சரி பன்னிரண்டு மணிக்கெல்லாஞ் சட்ட வட்டமாகச் சமையல் முடிந்திருக்கவேண்டும். பிற்பாடு மூன்றரை அல்லது நாலுமணியளவில் கோதம்பை ரொட்டி, பாண், உருளைக்கிழங்கு, கோழிமுட்டை முதலியன அவித்துத் தேத்தண்ணீரும் வைத்துக் கொடுக்கவேண்டும்.

இவைகளையெல்லாம் முறையே அருந்தி பின்னர் தலையை நல்லாய்ச் சீவிக்கொண்டு மேல்நோக்கி வளைந்த முறுக்கு வீசையை (மூக்குத்துவாரங்கள் மட்டில் நறுக்கி) மிலிற்றறி வீசையென்று விட்டுக்கொண்டு, பனியன் சேட் கோட் முதலியவைகளை முறையே ஒன்றன் மேல் ஒன்றாய் மாட்டிக்கொண்டு, ஒவ்வொரு பட்டுக் கைலேஞ்சியையும் மடித்து வெளிச்சேபியில் ஒருபக்கம் எல்லாருக்குந் தெரியக்கூடியதாக வைத்துக்கொண்டு கையில் ஒரு (Walking Stick) பிரப்புங் கொண்டு வெள்ளைச் சுருட்டையும் பற்றவைத்து உலாப்போகும் போது பார்த்தால் இவர்களை விட நாகரீகமுடையவர்கள் வேறெந்தத் தேசத்திலும் இல்லையென்றே சொல்லலாம். இன்னும் டிறாமா, பயஸ்கோப், சேக்கஸ் முதலான காட்சிகள் நடைபெறும் இடங்களுக்குக் கிரமமாக அதுவும் இவர்கள் நவநாகரீகத்துக்குத் தக்கவாறு முதலாம் வகுப்புச்சீட்டுக்கள் எடுத்துக்கொள்ளுகிறார்கள். இது இங்ஙனமிருக்க, இவர்கள் வெள்ளைச் சுருட்டுக் குடிக்கிறதற்கும் தேத்தண்ணீர் லெமனெட் முதலியன குடிப்பதற்குந் தங்கள் சிநேகிதருக்கு விருந்திடுவதற்கும் அவர்கள் படுஞ் சடணுவது ஒருபக்கம் பெற்றோரைக் குட்டிச் சுவராக்குகின்றது.

சில வேளைகளிற் பெற்றோர் நாலைந்து மைல் தூரத்துக்கப்பால் உள்ள ஓர் இடத்தில் இருக்கும் ஒருவரைக் கண்டு வரும்படி சொன்னால் வாலிபர் நடந்துபோகநாணமுற்று "கந்தப்பர் கடையில் சைக்கில் வண்டிகள் கையது வாடகைக்குக் கொடுக்கிறார்; காசுதந்தால் அதிலொன்றை எடுத்துக்கொண்டுபோய் உடனே வந்துவிடலாம்" என்று பிடிவாதமாய் நிற்கிறார்கள். என்ன கஷ்டப்பட்டுங் காசு கொடுத்தாற்றான் போவார்கள்,

இவர்களுக்குச் சில பெரியோர் "தம்பிமாரே இப்படி நீங்கள் சும்மா திரிகிறது சரியல்லவே, கமத் தொழிலையாவது செய்யுங்கள்" என்று புத்தி சொன்னால், வாலிபர்கள் "நாங்கள் என்னசெய்வோம்; எங்களுக்குக் கமத்தொழிலைப் பழக்கியிருக்கவேண்டும், அல்லது ஒரு வேலைக்குப் படிப்பித்திருக்கவேண்டும், பெற்றோர் எங்களைக் கெடுத்ததல்லாமல் எங்களில் என்னகுறையென்று மிகவுஞ்சுருக்கத்தில் நியாயஞ் சொல்லிவிடுகின்றனர். ஐயையோ இதற்குத்தானா பெற்றோர் பிள்ளைகளைப் படிக்கவைப்பது.

இந்த வாலிபர்கள் மிகவும் டம்பமாகத் திரிவதைப் பார்த்திருக்கும் அயலார், உறவினர், பெற்றோர் தங்களுடைய கட்டை கிடக்கும்போதே அவர்களுக்கு விவாகமுஞ் செய்து வைத்துவிடுகின்றனர். அம்மம்ம! அப்பால் இவர்கள் படுங் கஷ்டத்தைச் சொல்லவும் வேண்டுமே? இது கலியுகக் கொடுமையா? நம் தாய்நாடு செய்த தீவினையா? அல்லது நம்மவர்களது அறிவின்மையா? என்னென்று ஆறைகுதும்.

இங்ஙனம்,
கிராமியன்.

## இந்திய சமாசாரம்.

### மகாத்மாவின் விடுதலை விஷயம்.

விடுதலை விஷயமாக மகாத்மாவிடம் சொல்லப் பட்டபோது அவர் என்னை மீண்டும் சிறைக்கு அனுப்பினாற்றான் நான் வாசிக்கிற புஸ்தகங்களைப் படித்து முடிக்க முடியும். அப்படி வாசிப்பதனாலும் தேசசேவை செய்தவனாகிறேன் என்றுதான் நான் நினைக்கிறேன். ஒருகால் என்னை விடுதலை செய்தால் என் படிப்பு நிறுத்தப் பட்டுப் போகுமென்பது நிச்சயம். ஆனால் வேறு என்ன வேலை எனக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றதோ? என்றும் விடுதலை விஷயமாக எனக்கு யோசனையே பிறக்கவில்லை என்றும் ஷண்முகம் செட்டியாரிடம் கூறினார். செட்டியார் இந்தியச் சட்டசபையில் விடுதலை விஷயமாக ஒரு தீர்மானம் கொண்டுவரப் பாக்கியம் பெற்றிருப்பதாக மகாத்மாவிடம் கூறியதும் அவர் புன்சிரிப்புக் கொண்டனரே யொழிய வேறு ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. பம்பாய் சட்டசபையில் ஸ்ரீமான் ஜயகர் மகாத்மா விடுதலை செய்யப்படவேண்டு மென்ன ஒரு தீர்மானம் கொண்டுவரப் போவதாக அறிவித்திருக்கின்றார்.

### ஒரு மகாராஜாவின் வீரம்

பாரியா மகாராஜா மிகுந்த வீரம் காட்டியுள்ள ஒரு சம்பவத்தைப் பற்றிச்செய்திகிடைத்திருக்கிறது. இந்த ஜனவரியீ 6வ நள்ளிரவில் மேற்படி மகாராஜாவின் சமஸ்தானத்திலுள்ள ஒரு கிராமத்தில் ஆயுதந்தரித்த பட்டாணிகளின் கூட்டம் புகுந்து இரண்டுசெல்வந்தர்களின் வீடுகளைக் கொள்ளையடித்து ரூ 15,000த்துடன் ஓடிப்போய் விட்டார்கள். காலை 3-30க்கு டெலிபோன் மூலமாக இச்செய்தியையறிந்த மகாராஜா உடனே காலாட்படையை அனுப்பியதோடு தாமும் தமது சகோதரருடன் சென்று கொள்ளைக் கூட்டத்தினரைத் தேட ஆரம்பித்தார். அன்றிரவு கொள்ளைக் கூட்டத்தினரும் மகாராஜாவின் படையும் கைகலந்ததில் கொள்ளைக் காரர்களில் பலர்காயமடைந்த போதிலும் அவர்களில் ஒருவரைத்தவிர பாக்கி யெல்லோரும் ஓடிவிட்டார்கள் மறுநாள்இரவு மகாராஜாவே மங்களமாற்றி என்னும் கொள்ளைக் காரனைப்பிடித்தார். இதுவரையில் 5 கொள்ளைக்காரர்கள் பிடிக்கப்பட்டிருக்கின்றனர், இருவர் இறந்து போயினர்.

### குழந்தைகளுக்கு மகாத்மா எழுதிய பாட புத்தகம்.

இந்தமாதம் 19வ காலையில் சோமதேவியினுள்ள பாரத்வாஜ ஆசிரமத்துக்கு ஸ்ரீமாக் சங்கரலால்பாங்கர் வந்தனும் முதன் முதலில் குழந்தைகளுடன் பேசவேண்டுமென்று விரும்பினார். குழந்தைகள் அரிடத்தில்வந்து கூடியதும் அவர் கூறியதாவது:—மகாத்மா குழந்தைகளாகிய உங்களை அதிகமாக நேசிக்கிறார். பிற்காலத்தில் நீங்கள் உயர்ந்த நிலைமைக்கு வருவீர்களென்று அவர் எதிர்பார்க்கிறார். மகாத்மா சிறைக்குச் சென்றதும் முதன் முதலாகக்குழந்தைகளுக்காக ஒருபாட புத்தகம் எழுதினார். அதிற் பத்துப் பாடங்கள் இருந்தன. அரசாங்கத்தார் அந்தப் புத்தகத்தைப் பிரசுரிக்க அநுமதியளிக்கவில்லை. அப்புத்தகத்தின் முதற் பாடத்தின் தலைப்பில் தாயார் தனது குழந்தையை அதிகாலை 4 மணிக்கு எழுப்புவதுபோன்ற படம் போட்டிருக்கும். குழந்தை படுக்கையில் புரண்டு தூக்கம் வருகிற தென்றும் எழுந்திருக்கமுடியாதென்றும் சொல்லுகிறது. ஆனால் தாயார் அக்குழந்தையின்சகோதரி அதற்குள் எழுந்து காரியம் செய்கிறாளென்றும் தெய்வப் பிரார்த்தனை செய்யவேண்டிய காலம் நெருங்கிவிட்டதென்றும் கூறி எழுந்திருக்கும்படி மறுபடியும் அன்புடன் சொல்லுகிறாள். குழந்தை படுக்கையை விட்டெழுந்து தெய்வப் பிரார்த்தனை செய்கிறது. பிறகு தாயார் வேப்பங் குச்சியை கொடுத்துப் பல் துலக்கச் சொல்லுகிறாள். குழந்தையோ வேம்பு கசக்கிறதென்று அக்குச்சியினால் பல்விளக்க மறுக்கிறது. தாயார் வேப்பங்குச்சியினால்தான் பல்துலக்க வேண்டுமென்றும் அது கசப்பாயிருந்த போதிலும் தேகத்திற்கு நல்ல தென்றும் பல்லைச்சுத்தப் படுத்து மென்றும் கூறுகிறாள். சூரிய உதயத்திற்கு பிறகு குழந்தை இராட்டினத்தில் நூல் நூற்க ஆரம்பிக்கிறது. தினந்தோறும் அது நான்குமணி நேரம் நூற்க வேண்டும். காந்தியடிகள் தமது பாடபுத்தகத்தில் கூறியிருப்பது இதுவே. எல்லாக் குழந்தைகளும் அதிகாலையில் எழுந்திருக்க வேண்டுமென்றும் தேகத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் அவர் விரும்புகிறார். அவர் நாக்குக்கு ருசிதேடாமலிருக்கப் பழக்கம் செய்துகொள்ள வேண்டுமென்றும் கூறுகிறார்.

ஒவ்வொரு குழந்தையும் நூல் நூற்பதை தினந்தோறும் செய்ய வேண்டிய மதக்கடமையாகக் கொள்ளவேண்டுமென்று அவர்வற்புறுத்திக் கூறுகிறார். காந்தியடிகள் ஏன் இவ்விதம் கூறுகிறாரென்பது உங்களுக்குத் தெரியும். இராட்டினமின்றி நம்முடைய தாய் நாடு முன்னேற முடியாது. விவசாயமும் நூல் நூற்றலும் இந்தியாவின் முக்கிய தொழில்களாக இருக்கவேண்டும். நீங்களெல்லாரும் நூல்நூற்கஉடனே கற்றுக்கொண்டு தினந்தோறும் நூற்றுவருவீர்களென்று நம்புகிறேன்.

"நவசக்தி"

### காந்தியடிகளும் நோபல் வெகுமதியும்

நியூயார்க் "நேஷன்"பத்திரிகை பின்வருமாறு எழுதுகிறது:—

இவ்வருஷத்தில் சமாதான வெகுமதியை எவருக்கும் கொடுப்பதில்லையென்று தீர்மானித்திருப்பது மிகவும் பொருத்தமானதேயாகும். கொண்டாடுவதற்கு இவ்வருஷத்தில் சமாதானமே கிடையாது. மிஸ்டர் நான்ஸனின்முயற்சிகளின் சிமித்தம் அவருக்கு ஏற்கனவே செய்தாய் விட்டது. பால்ட்வின் அரசாங்கத்தில் உத்தியோகம் வகித்த பிறகு லார்ட் ராபர்ட் ஸெஸில் சமாதானத்தைப்பற்றிப் பேசுவதையும் நிறுத்தி விட்டார். ஐரோப்பாவிலுள்ள இராஜ தந்திரி எவரும் உலகத்தில் யுத்தமில்லாமற் செய்வதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை. அமெரிக்காவிலுள்ள நாம் ஒதுங்கியிருக்கிறோம். இரண்டுமாதங்களுக்கு முன் ஜெனரல் ஸ்மட்ஸ் அழகாகப் பேசினார். ஆனால் ஐரோப்பியத் தலைவர்கள் எவரும் ஆதரிக்காதவரையில் அவரால் என்ன செய்யக்கூடும்? ஆசியாவிலோ மகாத்மாகாந்தி சிறையிலிருக்கிறார். நம்முடையகாலத்தில் லட்சக்கணக்கான ஜனங்கள் பலாத்காரத்தை விட்டொழிக்கும்படி செய்த ஒரே மனிதராகிய அவர் தம்முடைய ஜனங்களிடமிருந்து பிரிக்கப்பட்டுச் சத்ருக்களால் அவ்வாறு கூறப்பட்டுவருகிறார். மேல்நாட்டு நாகரிகத்தின் தொடர்பினால் அவருடைய ஜனங்கள் பலாத்காரத்தை உபயோகிக்கும்போது இந்தக் கிம்காட்டு மகான்மீது குற்றஞ் சுமத்தப்படுகிறது. இற்றைக்குப் பத்தொன்பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ரோமபுரியிலாவது ஆர்லெஸ் என்னுமிடத்திலாவது இல்லியிலாவது நோபல் வெகுமதிக் கமிட்டி ஏற்பட்டிருந்திருக்குமானால் அது கலிலியில் சாத்வீகத்தைப் போதித்து வந்த இளைஞர் (ஏசுநாதர்) விஷயத்தில் தற்பொழுதுள்ள கமிட்டி மகாத்மாகாந்தி விஷயத்தில் காட்டுவதைவிட அதிகசவனம் செலுத்தி யிருக்காதென்று நினைக்கிறோம்.

"நவசக்தி"

## மேனாட்டுப் பழக்கங்களின் கேடு.

இந்த மகாஜன ஸமூகத்தில் பெரும்பாலோர் ரோகத்தினுற் பீடிக்கப்பட்டு வருந்துவதன் மூலகாரணம் வறுமையின் காரணத்தால் தேக சௌக்கியத்துக்குப் போதிய அளவு ஆகாரம் கிடையாமையேயாகும். இதுமட்டுமேயன்றி அவர்கள் கொள்ளும் அற்ப ஆகாரமும் ரோகத்தை உண்டுபண்ணக்கூடியதாயிருக்கின்றது. ஆனால் ஏழைமக்களைப்போல வறுமைக்கு அவ்வளவு ஆளாம் ஆட்படாமல், உத்தியோகம், வக்கீல்தொழில், வைத்தியம்போன்ற தொழில்களைச்செய்து சுகவாழ்க்கைக்குப் போதிய பணம் ஈட்டும் "படித்த" இந்தியர்கள் நோயினால் வருந்துவதேன்? நகரங்களாகிய நாகவாழ்க்கையின் ஆபாசங்கள் அதற்குக் கொஞ்சம் காரணமாயிருக்கலாம். ஆனால் முக்கிய காரணம் ஆகாரம், தேக ஆரோக்கியமுறை இந்த விஷயங்களில் மேனாட்டுப் பழக்கங்களைக் கையாடுவதேயாகும்.

முதன்முதலாக ஊன் உணவைப் படித்த இந்தியர்கள் பெரும்பாலார் கையாடிவருகின்றனர். நம் முன்னோர்களால் தொன்றுதொட்டு ஏற்பட்டு பழகத்தில் வந்திருக்கிற உண்டி முறை நூற்றுக்கணக்கான வருஷங்களாகப் பரீக்ஷித்துப்பார்க்கப்பட்டு நம்தேசக்கட்டுக்கு மிகவும் பொருத்தமானதெனத் தேர்ந்தெடுக்கப்பட்டது. அவ்வுண்டியிற் சேர்ந்திருக்குஞ் சாமான்களின் வாகடம், அவற்றின் குணகுணங்கள் எல்லாம் ஆராய்ச்சி செய்யப்பட்டு—அவைகள் அறுசுவை செறிந்து சுலபமாக ஜீரணமாகக்கூடியதும், உஷ்ணதேசத்தில் தேகக்கட்டைப் பாதுகாப்பதற்கு இயல்வதுமான உண்டிவகைகளாக அனுபவபூர்வமாகத் தொகுத்திருக்கிறார்கள். அரிசியில் தேக புஷ்டிக் காதாரமான பாகம் அதிகமாக இல்லாததால், அந்தப் பாகம் நிறைந்திருக்கும் பருப்பு, நெய், பால், தயிர் முதலிய சாமான்கள் அதனோடு சேர்க்கப்படுகின்றன. தயிர் தேகக்கட்டைக் காப்பாற்றக்கூடியதென்றும் தேகரோகங்களை உண்டாக்கும் கண்ணுக்குத் தெரியாத பூச்சிகளை நாசஞ்செய்யக்கூடிய வஸ்து பிறிதொன்றில்லையென்றும் டாக்டர் மெச்னிகாப் என்னும் ருஷிய தேசத்துப் பிரபல வைத்தியர் தயிரின் மகிமையைப்பற்றி எவ்வளவோ எழுதுகிறார். இதை நம்முன்னோர்கள் ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னரே கண்டுபிடித்திருக்கின்றனர். ஆவினின்று நாம் பெறும் பொருள்களாகிய பால், தயிர், நெய் இவற்றின் குண விசேஷத்துக்கு "அரனஞ்சாடுதல்" சர்வவியாதியையும் போக்கக்கூடியது என்ற உறுதியான நம்பிக்கையே சான்று. சங்கீதம் நடை உடை பாவனை முதலிய துறைகளில் நம்மனோர் மேனாட்டுப் பழக்கங்களைக் கையாடுவதுபோல உண்டியிலும் மேனாட்டு முறைகளைக்கையாட ஆரம்பித்துவிட்டனர், இப்பொழுது நாம் கையாடி வரும் உண்டிமுறை மிகவும் சிலாக்கியமானது என்று இங்கு சொல்ல வரவில்லை. இன்னும் எவ்வளவோ சீர்திருத்தங்களுக்குஇடமிருக்கிறது. உதாரணமாக, மிஷினில் தீட்டின அரிசியை நகரங்களில் நாம் பெரும்பாலும் உபயோகிக்கிறோம். இந்தவழக்கம் தேசத்துக்குத் தீங்கு விளைவிப்பது. அரிசியில் தவிட்டிலேதான் 'பாஸ்பரஸ்' முதலிய தேசாரோக்கியத்திற்குரிய பொருள்கள் இருக்கின்றன. தவிட்டைப் போக்கும்படி தீட்டின அரிசியை உண்பது "பெரி—பெரி" முதலிய கொடிய வியாதிகளுக்கு ஆஸ்பதம் என்று மேனாட்டுவைத்தியர்கள் சொல்லுகிறார்கள். அரிசியைத் தீட்டுவது, உமி போக்குவது, சமைப்பது இந்த விஷயங்களில் நாம் இப்பொழுது கையாடிவரும் முறைகளினால் தானியத்தின் புஷ்டிக்குக் காரணமாயிருக்கும்பாகத்தில் ஏறக்குறையப் பாதிபோய்விடுகிறதென்று கணக்குப் போட்டிருக்கிறார்கள். இன்னும்—கஞ்சியைச் சோற்றினின்றும் வடித்துவிடுவதில், புஷ்டி தரும் பாகம் பெரும்பாலும் வீணாய்விடுகிறது. அதனாலேயே நம்முன்னோர்கள் கஞ்சியை வடிக்காமல் தங்கவைத்து "ஹவிஸ்"ஸாகச் சமைப்பது சம்பிரதாயமாக வைத்துக்கொண்டிருந்தார்கள். இன்னும் மாவை மிகவும் சன்னமாக அரைப்பதினாலும் அதன் போஷகசக்தி குறைந்துவிடுகிறது. இதைத்தவிர, மிளகாய், பெருங்காயம் முதலிய வஸ்துக்கள் உபயோகிப்பது மிகவுங் கெடுதி, நம்முன்னோர்கள் உண்டிப் பதார்த்தங்களின் குணகுணங்களை ஆராய்ச்சிசெய்து சாத்விகம் ராஜசம் தாமசம் என மூன்று பிரிவாக வகுத்திருக்கின்றனர். அவற்றில் சத்வகுணத்தை அபிவிர்த்திசெய்யக்கூடிய பதார்த்தங்களையே உண்டு அதனாலேயே நீண்ட வாழ்வு பெற்றிருந்தனர். இக்காலத்திலோ, நாம் உண்டியில் ஒரு கட்டுப்பாடுமின்றி தாமஸ, ராஜஸ குணங்களைப் பெருக்கக்கூடிய பெருங்காயம், மிளகாய் முதலிய பதார்த்தங்களைத் தாராளமாகச் சேர்த்துக்கொள்ளுகிறோம்.

இன்னும் நம்நாட்டிற் பெரும்பாலார் ஊன் உண்டி உண்ண ஆரம்பித்துவிட்டார்கள். நகரங்களில் எங்கேபார்த்தாலும் ஊன் உண்டிச்சாலைகளும் மிலிட்டேரி ஹோட்டல்களும் மலிந்துவிட்டன. ஊன் உண்டி தாவர உண்டி இவ்விருவகை ஊண்களின் குணதோஷங்களை விரிக்கிற் பெருகும். ஆனால் ஊன் உண்பதனால் தேக ஆரோக்கியத்திற்கு உண்டாகும் இரண்டு கேடுகளை மட்டும் இவ்விடம் குறிப்பிடுவோம். ஊன் உண்டி ஜீவ ஹிம்சையை அதிகரிக்கச் செய்கிறது என்னும் ஆட்சேபணையைத்தவிர ஊன் உண்டி தாவர உண்டியைவிட அதிக விலையுள்ளது. இரண்டாவது இந்தியாவைப்போலுள்ள உஷ்ணதேசத்தில் தேக உஷ்ணத்தைப் பெருக்குவது. மூன்றாவதாக நம் நாட்டைப் போன்ற உஷ்ணதேசத்தில் ஊன் உணவு பல வேறு வியாதிகளுக்கு அடிப்படையாகிறது அப்படியிருக்க நம்மிற் பலர் ஊன் உணவைக் கையாட ஆரம்பித்துவிட்டதன் காரணமென்ன? ஊன் உண்டியை ஆதரித்துப் பேசுவோர் ஊன் உண்டியைத் தாங்கள் கைக்கொண்டிருப்பதற்கு முக்கியகாரணமாகச் சொல்லுவதென்னவெனில் ஊன் உண்டி தேகபலத்தையும் தேகசௌகரியத்தையும் விருத்தி செய்கிறது என்பதே. ஆனால் பிரத்தியக்ஷ அனுபவத்தை நோக்கும்போது இது உண்மையல்லவென்றுதெரிகிறது. உதாரணமாகத் தாவர உணவைக் கையாளும் ஜப்பானியர் ஊன் உண்டியை உண்ணும் மேனாட்டுச்சாதியாரைவிட தேகபலத்திலும் யுத்தத்திற் காட்டும் சௌரியத்திலும் எவ்வளவேனும் தாழ்ந்தவர்களல்ல. இன்னும் இந்தியாவில் மலைப்பிரதேசங்களில் வசிக்கும் பல ஜாதியார்கள் தாவர உணவே உண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தேகபலமும், தேகசௌகரியமும் அபாரமாகவே இருக்கிறது.

தேஹபுஷ்டியைக் கொஞ்சமேனும் கொடுக்காமல், தேஹ ஆரோக்கியத்துக்கு அளவற்ற தீங்கு விளைக்கும் இன்னும் சில பழக்கங்கள் நம்மிற் பலருக்கு அப்பியாசமாய் விட்டன. கள் சாராயம்முதலிய போதைப்பானங்களைக்குடிக்கும் வழக்கம் பெருகிவிட்டது. இதுவும் காப்பி தேயிலைமுதலியபானங்களை உட்கொள்ளும்வழக்கமும் மேனாட்டுநாகரிகத்துக்கு நாம் அடிமைப்பட்டதன் பயன்களிற் சில. ஆங்கிலப் படிப்பு நம்முட் பரவ ஆரம்பமானமுறவில் மதுபானம் நாகரிகத்துக்கும் முன்னேற்றத்துக்கும் அறிகுறி என்ற ஒருதவறு எண்ணம் நம்மில் "படித்த"வர்களுக்குள் பரவியிருந்தது. ஆனால் நல்லவேளையாக அந்த எண்ணம் இப்பொழுது அடியோடு போய் விட்டது. குடிவழக்கமும் மேல் வகுப்பார்களுக்குட் பெரும்பாலாரை அடிமைப்படுத்தவில்லை. ஆனால் காப்பி தேயிலை முதலிய பானங்களைக் குடிக்கும்வழக்கத்தை ஏழைகள் உட்பட எல்லாரும் கைக்கொண்டு விட்டார்கள் ஆண் பெண், குழந்தைகள் அடங்கலும்'காப்பி' வழக்கத்தைக் கையாட ஆரம்பித்து விட்டார்கள். இந்தப்பானங்கள் தற்போதைக்கு ஒருவிதமான ஊக்கத்தைக் கொடுத்தாலும் நாளடைவில் தேஹக்கட்டையும் தேஹசௌக்கியத்தையும் கெடுத்து விடுகின்றனவென்று வைத்திய சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். க்ஷயவியாதி முதலிய பல்வேறு வியாதிகளுக்கு இந்த வழக்கமே மூலம். (வரும்).

"லோகோபகாரி"

## அறிவித்தல்.

வேலணை கிழக்கு இலந்தைக்காட்டுப் பிள்ளையார்கோவிலிற் பூசைசெய்யும் பிரமஸ்ரீ சம்புகேஸ்வர ஐயருக்கும், ஊரவர்களால் மேற்குறித்த கோயில் மானேசராகத் தெரிவு செய்யப்பட்ட மேற்படியூர் வீரகத்தியார் கார்த்திகேசராகிய எனக்குமிடையில் பெரியகோட்டில் 16190ம் இலக்கத்தில் வழக்கு நடந்து கோவில் ஊர்ப்பொதுவாகவும் ஐயர் பூசைக்காரனுகவும் என்னையும் மேற்படி ஐயரையும் மானேசராகவுந் தீர்ந்தது. இனி மேற்படிகோவில் திருப்பணிவேலை நடைபெறவேண்டியிருப்பதால் குறித்த கோவிற் திருப்பணிக்குப் பொருளுதவும் தருமசீலர்களுக்குத்தெரிவிப்பது மேற்படி கோவிலின் நிர்வாக சபையாரால் பணஞ் சேகரிப்பவரைத் தெரிவுசெய்து இப்பத்திரிகை மூலமாகப் பெயர்வெளிகாரரையும் அதன் விபரங்களையும் தெரிவிக்கப்படுமென்பதை யறியத்தருகிறேன்.

வேலணை கிழக்கு,
25—1—24. வீ. கார்த்திகேசு.
(Mis. 431.)


யாழ்ப்பாணத்து வேலணை பெரியபுலம்.

## ஸ்ரீ மகாகணபதிப்பிள்ளையார்கோவிற் திருப்பணி விஞ்ஞாபனம்.

——O——

சிவபுண்ணியச் செல்வர்காள்!

யாழ்ப்பாணத்திலுள்ள புராதன ஆலயங்களுள் ஒன்றுயுள்ளதும் மூர்த்திதலம் தீர்த்தவிசேஷம் அமைந்துள்ளதுமாகிய வேலணை பெரியபுலம் ஸ்ரீ மகாகணபதிப்பிள்ளையார்கோவில் இற்றைக்கு நூற்றைம்பது வருடங்களுக்குமுன் சுதையினுற் கட்டப்பட்டிருப்பதால் இப்பொழுது ஜீர்ணமாயிருக்கின்றது. திருவருளை முன்னிட்டு இப் புராதன ஆலயத் திருப்பணியைக் கருங்கல்லினுல் நிறைவேற்ற நினைத்து பாலஸ்தாபனஞ் செய்து காலியிலிருந்து கருங்கற்களைத் தருவித்துக் கருங்கற் திருப்பணியாகவே ஆரம்பித்து இதுவரையில் இரண்டு மண்டபத்திற்கும் ஐந்துவரிகளுக்கான கற்கள் வேலைசெய்யப்பட்டிருக்கின்றன. இத்திருப்பணியை நிறைவேற்றுதற்கு இன்னும் 18000 ரூபாவரையில் வேண்டுமென மதிப்பிட்டிருக்கின்றனர். இதுபோன்ற சிவபுண்ணியத்தை ஒருவரிருவர் பொருள்கொண்டு நிறைவேற்றுதல் முடியாதாகும். சிவபுண்ணிய சீலர்களாயுள்ள ஒவ்வொருவரும் தங்கள் தங்களாலியன்ற திரவிய சகாயஞ் செய்து இத்திருப்பணியை நிறைவேற்றி அழியாப்புகழையும் புண்ணியத்தையும் அடைதல் வேண்டும். திருப்பணிக்குப் பொருள் சேர்க்கும்பொருட்டு இவ்வூர் ஸ்ரீ விசுவநாதர் முத்துத்தம்பியவர்களையும் ஸ்ரீ நா சின்னையாபிள்ளையவர்களையும் பிற ஊர்களுக்கனுப்பியிருக்கின்றேம். சிவபுண்ணியச் செல்வர்களாகவுள்ள நீங்கள் ஒவ்வொருவரும் அவர்களை ஆதரித்து உங்களுங்களாலியன்ற பொருளுதவி செய்து இந்தச் சிவபுண்ணியத்தை நிறைவேற்றி சித்திவிநாயகப்பெருமகன் திருவருளையும், அழியாப் புகழையும் புண்ணியத்தையும் பெறுவீர்களாக.

"போம்பொழு தருந்துணை புரிந்த புண்ணியம்".

இங்ஙனம்,
கை. நமசிவாயக்குருக்கள்.

(Mis. 429.)

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

——:O:——

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவுபிடிக்கும் பெரி. லெ. ரும. சோமசுந்தரஞ் செட்டியாரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி டை சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கவேண்டிய நகைகளின் விபரம்:—

1922ஞு

| நம். | மீ | உ | ரூ. சத. | ஊரும் பெயரும். | நகை விபரம். |
|---|---|---|---|---|---|
| 395 | ருலை | 21 | 28 | வட்டுக்கோட்டை வயிரமுத்து செல்லப்பா | பொன் கைச்சங்கிலி 1 |
| 403 | ,, | 21 | 100 | வண்-மேற்கு வே. மயில்வாகனம் | பொன் சாதா தாயித்து1, மெடல்1, சிகப்பு நீல வெள்ளைகட்டிய காதோலை சோடி 1 கல் கொண்டைப்பூ 1 |
| 405 | ,, | 24 | 196 | ,, | ,, பொன் கைமெடல் 1, செப்புக்கட்டை உட்பட தொலைகாப்பு சோடி1, வெள்ளியிடுப்புச் சங்கிலி 1 |
| 448 | ஆகஸ். | 3 | 45 | நயினுதீவு ரெ. இராமப்பிள்ளை | பொன் பளுது கம்பிப்பூராணட்டியல் 1 |
| 480 | ,, | 11 | 32 | மல்லாகம் சி. சுப்பிரமணியம் | பொன் சிகப்புக்கல் ஒலை சோடி 1 |
| 486 | ,, | 13 | 50 | வண்-கிழக்கு அ. அ. அண்ணுச்சாமி | பொன் சிகப்பு நீல வெள்ளைகட்டிய காதோலை சோடி 1 |
| 500 | ,, | 22 | 45 | நயினுதீவு வ. கணபதிப்பிள்ளை | பொன் கம்பிப்பூராணட்டியல் 1 |
| 516 | ,, | 28 | 100 | வட்டுக்கோட்டை மு. முத்தாச்சி | பொன் சிகப்பு நீல வெள்ளை பச்சை கட்டிய பதக்கம்1, கொண்டைப்பூ 1 |
| 539 | செப். | 6 | 45 | நயினுதீவு ரெ. இராமப்பிள்ளை | பொன் கம்பிப்பூராணட்டியல் 1 |
| 575 | ,, | 22 | 50 | நயினுதீவு நா. நடராசா | பொன் கம்பிப்பூராணட்டியல் 1 |
| 619 | அக். | 11 | 45 | கொக்குவில்-கிழக்கு மா. அருளம்பலம் | பொன் கம்பிப்பூராணட்டியல் 1 |
| 624 | ,, | 12 | 100 | வண்-மேற்கு வை. இராமனுதர் | பொன் பூக்காப்பு சோடி 1 |
| 643 | ,, | 21 | 150 | வண்-கிழக்கு அ. அ. அண்ணுச்சாமி | பொன் குண்டுச்சங்கிலி 1 |
| 747 | நவம். | 28 | 47 | நயினுதீவு சி: கதிரேசு | பொன் கம்பிப்பூராணட்டியல் 1 |
| 756 | ,, | 30 | 170 | வண்-மேற்கு கா. பொன்னம்பலம் | வெள்ளிக்கொடி உட்பட பொன் சருடு 1 |
| 764 | டிச. | 5 | 100 | ஐயனுர்கோவிலடி மா. செல்லத்துரை | பொன் மருக்கன்சிவப்புவைத்த பதக்கத்துடன் குண்டுச்சங்கிலி 1 |
| 780 | ,, | 10 | 40 | வண்-கிழக்கு அ. அ. அண்ணுச்சாமி | பொன் சிகப்பு வெள்ளை கட்டிய காதோலை சோடி 1 |
| 814 | ,, | 18 | 20 | வண்-மேற்கு செ. அப்பாத்துரை | பொன் சரடு 1 |
| 823 | ,, | 22 | 65 | நயினுதீவு ரெ. இராமப்பிள்ளை | வெள்ளிபாதசரம் சோடி 1, மருக்கன் சிகப்பு காதோலைசோடி 1 |
| 853 | ஜன. | 1 | 70 | வண்-மேற்கு கா. பொன்னம்பலம் | பொன் கம்பிப்பூராணட்டியல் 1 |

விற்பனவு:—1924ஆ ஜனவரி 20உ (2-2-24) சனிக்கிழமை காலை பத்துமணி தொடக்கம் எடுபட்ட நகை பிறகின்னவாக டை கடையில் பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

அரு. செல்லையா உடையார்,
வெர்நிஸ்மேர்தர்.

(Mis. 420.)

## "லோகோபகாரி".

30-வருஷகாலமாக இது தமிழுலகமெங்கும் உலவி வருகிறது. இதில் வேதாந்த விஷயங்களும் எளிய தமிழில் எழுதப்படும் சமாசாரங்களும் இனிய பாடல்களும் சித்திரபடங்களும் வெளிவரும். உலகத்தில் நடக்கும் ஒவ்வொரு விஷயத்தையும் பற்றி இப்பத்திரிகை எவருக்கும் அச்சமின்றி, உண்மையைக் கடைப்பிடித்து நடுநிலையான அபிப்பிராயங்களை வெளியிட்டுவரும். நாட்டிலே புத்துயிர் ஏற்பட்டு இந்தியர் சுயராஜ்ய பதவி யடைந்து ஞாலமெல்லாம் இன்பம் அடைய வேண்டு மென்பதே "லோகோபகாரி" யின் முக்கிய நோக்கம் ஸ்ரீமான். பரலி சு. நெல்லையப்பபிள்ளை அவர்கள் இதன் ஆசிரியராகவும் அதிபராகவும் இருக்கின்றார். தமிழறிந்த ஒவ்வொருவரும் இதனை ஆதரிக்கவேண்டும். வருஷசந்தா ரூபா நான்கே. வெளிநாட்டிற்கு ரூபா 6. மாதிரிப்பிரதி இனும்.

காரியஸ்தர், "லோகோபகாரி"
சோமலேஸ்வரன் பேட்டை, சென்னை.

## "பணம்" "பணம்"

"பணம்" இதென்ன விளம்பரம்? "பணம்" என்னும் பத்திரிகையைப் பற்றியதோ? ஆம். "பணம்" என்னும்பெயரைக் கேட்டளவிலேயே உள்ளம் இன்பக்கடலாடுகின்றது. இது ஒரு தமிழ் வாரப்பத்திரிகை. இதன் ஆசிரியரை நாம் நெடுங்காலமாக அறிவோம். செந்தமிழ்நாட்டில் சிறுவர் ,சிறுமியர் முதல் விருத்தர்ஈறாக யாவரும் மனமுவந்து வாசிக்கக்கூடிய பத்திரிகை "பணம்" பத்திரிகையேயாகும். ஒருவாரத்தின் செய்திகள் அத்தனையும் ஒன்று கூட விடாமல் தன்னகத்தே தாங்கி நிற்கும் திறன் "பணம்" பத்திரிகைக்கு உண்டு. இவ்வொரு பத்திரிகையைமட்டும் வாசித்தால் ஒரு தினசரிப்பத்திரிகையைத் தொடர்ந்து வாசிப்பதிலும் அதிகமான சங்கதிகளை அறியலாம். உடனே "பணம்" பத்திரிகையைப் பெறுங்கள். சந்தாதாரராகுங்கள். வருடமுடிவில் ஒருபுஸ்தக உருவமாகக்கூடிய சிறப்புடையது. உடனே எழுதுங்கள். உங்களுக்கு இது அவசியமான பத்திரிகை. வருடச்சந்தா ரூபாய் ஐந்து.

விலாசம்:—மானேஜர் "பணம்"
ஆபீஸ், திருச்சி.

உலகெங்கும்புகழ்பெற்றநற்சாட்சிகள்பெற்றது
புஷ்டிக்கு கைகண்ட
ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.
ஒரு முறை தருவித்துப் பாருங்கள்!!

புஷ்டிக்கு இதற்கு நிகரானது ஒன்றுமில்லை. பரீக்ஷிக்க ஒரே குளிகை போதும்; இழந்துபோனபலத்தை திரும்பக் கொடுக்கும்; நரம்புத் தளர்ச்சியடைந்து வருந்துவோர்க்குத் திவ்விய ஔஷதம். இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தை தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150 பில்ஸ் ரூ. 10. 50 பில்ஸ் ரூ. 4-0-0
20 பில்ஸ் ரூ. 2. வி. பி. சார்ஜ் வேறு.

பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்திசெய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை, நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம், உடனே நிற்கும். 1-புட்டி ரூ. 2

பிளேக் மாத்திரை.

சுரம்கட்டி கண்டவுடனே ஒரு மாத்திரை சாப்பிட்டால் 9 மணி நேரத்தில் சுரத்தை நிறுத்தும்; ஜன்னி தோஷம் வராது. புட்டிக்கு ரூ. 2. கட்டிக்கு பிளாஸ்திரி ரூ. 1.

T. R. கருப்பண பிள்ளை,
(Q. 41 வைத்.) சியாசாலை,பழனி. S. I


வான்முகில் வழாது பெய்கமலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.